©
GOVERNMENT OF TAMIL NADU
2014

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 1.60 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 21] CHENNAI, WEDNESDAY, JUNE 4, 2014
Vaikasi 21, Jaya, Thiruvalluvar Aandu – 2045

## Part II—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Secretariat Departments.**

## NOTIFICATIONS BY GOVERNMENT

### CONTENTS

| | Pages. |
|---|---|
| தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | |
| Industrial Tribunal for Adjudication .. .. .. | 410 |
| Labour Courts for Adjudication .. .. .. | 410-411 |

## NOTIFICATIONS BY GOVERNMENT

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

**Disputes between Workmen and Managements referred to Industrial Tribunal for Adjudication.**

**புதுத்தோட்டம் எஸ்டேட், வால்பாறை**

*[அரசாணை (டி) எண் 153, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 7, மே 2014, சித்திரை 24, ஜய, திருவள்ளுவர் ஆண்டு 2045.]*

No. II(2)/LE/344/2014—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக புதுத்தோட்டம் எஸ்டேட், வால்பாறை என்ற நிர்வாகத்திற்கும், பாரதீய தோட்ட தொழிலாளர் சங்கம், கோவை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற் தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை தொழிற் தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

எனவே 1947–ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, சென்னை, தொழிற்தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 10(2ஏ) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை, தொழிற்தீர்ப்பாயத்திடம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

அனைத்து தொழிலாளர்களின் 2012 நவம்பர் மாத சம்பளத்தில் 7 நாட்கள் சம்பள பிடித்தம் செய்துள்ள நிர்வாகத்தின் செயல் நியாயமானதுதானா? இல்லையெனில் தொழிலாளர்களுக்கு கிடைக்கக்கூடிய நிவாரணம் என்ன? உரிய உத்திரவுகள் பிறப்பிக்கவும்.

**Disputes between Workmen and Managements referred to Labour Courts for Adjudication.**

**கெம்ப்ளாஸ்ட் சன்மார் லிமிடெட், பிளாண்ட்–3, மேட்டூர் ஆணை.**

*[அரசாணை (டி) எண் 150, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 7, மே 2014, சித்திரை 24, ஜய, திருவள்ளுவர் ஆண்டு 2045.]*

No. II(2)/LE/345/2014.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக கெம்ப்ளாஸ்ட் சன்மார் லிமிடெட், பிளாண்ட்–3, மேட்டூர் அணை என்ற நிர்வாகத்திற்கும் மேட்டூர் கெம்ப்ளாஸ்ட் பிளாண்ட்–3 தொழிலாளர்கள் பாதுகாப்பு சங்கம், மேட்டூர் அணை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற் தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

எனவே 1947–ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, சேலம், தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 10(2ஏ) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சேலம், தொழிலாளர் நீதிமன்றத்திடம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினாக்கள்**

சைரிங்நீ்ச ஐத் 1:

இணைப்பில் கண்டுள்ள 33 தொழிலாளர்களுக்கு கிரேடு உயர்வு வழங்கப்பட வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

| *வரிசை எண்* (1) | *பெயர்* (2) | *டோக்கன் எண்* (3) |
|---|---|---|
| 1 | டி. முத்துசாமி | 2601 |
| 2 | எஸ். செந்தில்குமார் | 2602 |
| 3 | எல். நடராஜன் | 2607 |
| 4 | ஆர். நாராயணன் | 2795 |
| 5 | சி. ராமன் | 2580 |
| 6 | எஸ். அமுல்ராஜ் | 7089 |
| 7 | எஸ். பாலசந்திரன் | 7099 |
| 8 | எம்.எம். ஹனீபா | 2536 |
| 9 | எஸ். ராதாகிருஷ்ணன் | 7006 |
| 10 | எஸ். கருப்பசெட்டி | 2523 |
| 11 | எஸ். அன்பழகன் | 2575 |
| 12 | செல்வகுமார் | 1180 |
| 13 | எம். ரவிக்குமார் | 7082 |
| 14 | டி. சண்முகவடிவேலு | 1464 |
| 15 | ஐ. கோவிந்தராஜ் | 2392 |
| 16 | மதியழகன் | 9663 |
| 17 | ஜே. இராமன் | 7085 |
| 18 | வி. மனோகரன் | 2503 |
| 19 | எஸ். அன்பழகன் | 5674 |
| 20 | கணேசன் | 5674 |
| 21 | சுப்பிரமணியம் | 2508 |
| 22 | என். மதியழகன் | 7045 |
| 23 | எம். இராமன் | 2517 |

| வரிசை எண் (1) | பெயர் (2) | டோக்கன் எண் (3) |
|---|---|---|
| 24 | என். ராஜேந்திரன் | 2576 |
| 25 | எம். மாது | 2604 |
| 26 | விஜயகுமார் | 2603 |
| 27 | டி. செல்வமணி | 2625 |
| 28 | கே. மருதன் | 2542 |
| 29 | கே. முனுசாமி | 1468 |
| 30 | ஆர். செந்தில்குமார் | 2606 |
| 31 | தவமணி | 2389 |
| 32 | ஏ. மாது | 7105 |
| 33 | சி. பழனிசாமி | 7065 |

**எழுவினா**

சைிரிங்நீ^ச ஐத். 3:

திரு. மதியழகன் என்ற தொழிலாளியை பணியிட மாற்றம் செய்த நிர்வாகத்தின் 17–6–2013–ம் தேதிய உத்தரவு ரத்து செய்யப்பட வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆமெனில் உரிய உத்திரவு பிறப்பிக்க.

**வாழப்பாடி பேரூராட்சி, வாழப்பாடி**

*[அரசாணை (டி) எண் 155, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 7, மே 2014, சித்திரை 24, ஜய, திருவள்ளுவர் ஆண்டு 2045.]*

No. II(2)/LE/346/2014.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக வாழப்பாடி பேரூராட்சி, வாழப்பாடி என்ற நிர்வாகத்திற்கும் சேலம் மண்டல அனைத்து பணியாளர்கள் சங்கம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற் தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

எனவே 1947–ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, சேலம், தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 10(2ஏ) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சேலம், தொழிலாளர் நீதிமன்றத்திடம் கேட்டுக்கொள்ளப்டுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. கே. செந்தில்குமார் என்பவருக்கு பணிமறுக்கப்பட்ட நாட்களுக்கு பணிவரன்முறை செய்தும் விடுப்பு அனுமதித்தும் அதற்கான ஊதியம் மற்றும் அரசால் உயர்த்தி அறிவித்த ஊதியமும், பிழைப்பூதியமும் வழங்கக்கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்திரவு பிறப்பிக்க.

**வெங்கரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிமிடெட், வெங்கரை அஞ்சல், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்.**

*[அரசாணை (டி) எண் 156, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 7, மே 2014, சித்திரை 24, ஜய, திருவள்ளுவர் ஆண்டு 2045.]*

No. II(2)/LE/347/2014—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக வெங்கரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிமிடெட், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம் என்ற நிர்வாகத்திற்கும் சேலம் மண்டல அனைத்து பணியாளர்கள் சங்கம், அஸ்தம்பட்டி, சேலம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற் தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

எனவே 1947–ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, சேலம், தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 10(2ஏ) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சேலம், தொழிலாளர் நீதிமன்றத்திடம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. கே. குமாரசாமி என்பவரது பணியை 1–1–2007–ம் தேதி முதல் வரன்முறை செய்தும் எழுத்தராக பதவி உயர்வு வழங்கி அதற்கான ஊதியம் வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU